பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
26 10 2024 **Saturday -** 12 40 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- மருத்துவ ஆராய்ச்சிப் பணிகளுக்கு ஊக்கமளிக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- ஜார்க்கண்ட்டில் பிஜேபி மாநில செயல் தலைவராக டாக்டர் ரவீந்திரகுமார் ராய் நியமிக்கப்பட்டுள்ளார்.
- மகாராஷ்ட்ரா சட்டப்பேரவை தேர்தலுக்கான மேலும் ஒரு வேட்பாளர் பட்டியலை காங்கிரஸ் வெளியிட்டுள்ளது.
- சென்னை மெட்ரோ ரயில் திட்டப் பணிகள் தொடர்பாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், மத்திய அமைச்சர் திரு. மனோகர்லால் கட்டாருடன் இன்று சென்னையில் ஆலோசனை மேற்கொண்டார்.
- 23 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

**>>>>><<<<<**

மருத்துவ ஆராய்ச்சிப் பணிகளுக்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாக சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

புதுதில்லியில் ஐந்து புதிய மருத்துவ ஆராய்ச்சிப் பணிகளை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

மருத்துவத் துறையில் சுயசார்பினை எட்டுவதற்கு இந்த ஆராய்ச்சிப் பணிகள் வலு சேர்க்கும் என்று அவர் தெரிவித்தார்.

எதிர்கால மருத்துவ சவால்களை எதிர்கொள்வதற்கும் இது உறுதுணையாக இருக்கும் என்று திரு. ஜெ.பி. நட்டா கூறினார்.

**>>>>><<<<<**

இணையதள பாதுகாப்பு தொடர்பான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதென இந்தியாவும் இத்தாலியும் முடிவு செய்துள்ளன.

புதுதில்லியில் இரு நாடுகளுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுக்களின் போது இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

வெளியுறவுத்துறை அதிகாரிகள் இந்த பேச்சுக்களில் பங்கேற்றனர்.

>>>>><<<<<

சாலை பாதுகாப்பின் ஒரு பகுதியாக தரமான தலைக்கவசம் உற்பத்தி செய்யப்படுவதை அதிகாரிகள் உறுதி செய்யுமாறு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, மாவட்ட ஆட்சியர்களுக்கு மத்திய அரசு சார்பில் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

தரமற்ற தலைக்கவசம் உற்பத்தி செய்யப்படுவதை கண்டறிந்தால், சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மீது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அந்த கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து, பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுவரை, தரமற்ற தலைக்கவசம் உற்பத்தி செய்தது தொடர்பாக 162 நிறுவனங்களின் உரிமங்கள் ரத்து செய்யப்பட்டிருப்பதாகவும் அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

பீகாரில் நான்கு சட்டப்பேரவை தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 13ஆம் தேதி நடைபெறவுள்ள இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நேற்று நிறைவடைந்தது.

50 பேர் மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

அதிகபட்சமாக **Belaganj** –தொகுதியில் 17 பேர் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

மனுக்கள் மீதான பரிசீலனை வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

மனுக்களை விலக்கிக் கொள்ள வரும் புதன்கிழமை கடைசி நாளாகும்.

>>>>><<<<<

ஜார்க்கண்ட்டில் பிஜேபி மாநில செயல் தலைவராக டாக்டர் ரவீந்திரகுமார் ராய் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான அறிவிப்பை பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. ஜெ.பி. நட்டா வெளியிட்டுள்ளார்.

இந்த நியமனம் உடனடியாக செயல்பாட்டிற்கு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

**>>>>><<<<<**

மகாராஷ்ட்ரா சட்டப்பேரவை தேர்தலுக்கான மேலும் ஒரு வேட்பாளர் பட்டியலை காங்கிரஸ் வெளியிட்டுள்ளது.

23 பேர் இந்த பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

இதன்படி, **Nilanga** தொகுதியில் திரு. **Abhaykumar Satish Rao Salunkhe-**வும், **Akot** தொகுதியில் திரு. **Mahesh Gangane-**வும் போட்டியிடுகின்றனர்.

**>>>>><<<<<**

சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்டப் பணிகள் குறித்து, முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், மத்திய அமைச்சர் திரு. மனோகர்லால் கட்டாருடன் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

சென்னையில் நடைபெற்ற இந்த ஆலோசனையின் போது இரண்டாம் கட்டப் பணிகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>>><<<<<**

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமரின் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

>>>>><<<<<

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால், கேரளா மற்றும் மாஹே-யின் ஒரு சில பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது.

தேனி, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி, மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்றும் கனமழை நீடிக்க வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, மதுரையில் பெய்த கனமழை காரணமாக, குடியிருப்பு பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - ரகுராஜா 45 செகண்ட்ஸ்)

இந்நிலையில், மதுரையில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மீட்புப் பணிகளை முழுவீச்சில் மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

>>>>><<<<<

சூடானில் துணைநிலை ராணுவப் படையினர் நடத்திய தாக்குதலில் 50க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர், 200க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

மத்திய சூடான் பகுதியில் உள்ள **Alseriha** கிராமத்தில் துணைநிலை ராணுவப் படையினர் இந்த தாக்குதலை நடத்தியதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

அந்நாட்டு ராணுவத்தினருக்கும் - துணைநிலை ராணுவப் படையினருக்கும் இடையே நடைபெற்று வரும் மோதலே இதற்கு காரணம் என்று தகவல்கள் கூறுகின்றன.

இந்த தாக்குதலுக்கு சூடான் வெளியுறவுத்துறை கடும் கண்டனம் தெரிவித்துள்ளது

>>>>><<<<<

**Congo-**வில் குரங்கு அம்மைக்கான இரண்டாம் கட்ட தடுப்பூசி இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது.

முதல் கட்ட தடுப்பூசி இயக்கம் கடந்த 5ஆம் தேதி தொடங்கியது.

இதில் மருத்துவர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

தற்போது தொடங்கப்பட்டுள்ள இரண்டாம் கட்ட தடுப்பூசி இயக்கத்தில் அதிகமாக பாதிக்கப்படக்கூடும் என கண்டறியப்பட்டுள்ள பிரிவினருக்கு தடுப்பூசி செலுத்தப்படுவதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

ஐ.நா பொதுச்செயலர் திரு. **Antonio Guterres,** யுக்ரைனில் பயணம் மேற்கொள்ளும் திட்டத்தை ரத்து செய்யுமாறு அந்நாட்டு அதிபர் திரு. **Volodmyr Zelenskyy** கூறியுள்ளார்.

ரஷ்யாவில் நடைபெற்ற பிரிக்ஸ் மாநாட்டில் பங்கேற்ற திரு. அன்டோனியோ குட்ரஸ், சுவிட்சர்லாந்தில் கடந்த ஜூன் மாதம் யுக்ரைன் நடத்திய அமைதிக்கான மாநாட்டில் பங்கேற்காததை சுட்டிக்காட்டி, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

>>>>><<<<<

23 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

அல்பேனியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் மகளிர் 65 கிலோ எடைப்பிரிவில், **Shiksha**–வும, 57 கிலோ எடைப்பிரிவில், **Neha Sharma** வும் வெண்கலப் பதக்கம் வென்றனர்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை ஒரு வெள்ளி, நான்கு வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

>>>>><<<<<

நியூஸிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், இந்தியா வெற்றிபெற 359 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

புனேயில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மூன்றாம் நாளான இன்று ஐந்து விக்கெட் இழப்புக்கு 198 ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன் இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்து ஆடிய நியூஸிலாந்து, 255 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக **Tom Latham** 86 ரன் எடுத்தார்.

வாஷிங்டன் சுந்தர் 4 விக்கெட்டுகளையும், ஜடேஜா 3 விக்கெட்களையும், அஸ்வின் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

359 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு இரண்டாவது இன்னிங்ஸை ஆடிவரும் இந்தியா சற்றுமுன்வரை 2 விக்கெட் இழப்பிற்கு 110 ரன் எடுத்துள்ளது.

**>>>>><<<<<**

19 வயதுக்குட்பட்டோருக்கான உலக குத்துச்சண்டை சாம்பியன் போட்டி அமெரிக்காவின் **Colorado**–வில் இன்று தொடங்குகிறது.

இந்தியா உட்பட 30 நாடுகளைச் சேர்ந்த 180க்கும் மேற்பட்டோர் இதில் பங்கேற்கின்றனர்.

**>>>>><<<<<**

ஜெர்மனியில் நடைபெற்ற சர்வதேச ரயில்வே வாலிபால் சாம்பியன் போட்டியில் இந்தியா கோப்பையை வென்றது.

இறுதியாட்டத்தில் இந்தியா ஜெர்மனியை வென்றது.

**>>>>><<<<<**

மலேசியாவில் நடைபெற்று வரும் ஜோஹர் கோப்பைக்கான ஜூனியர் ஹாக்கிப் போட்டியின் வெண்கலப் பதக்கத்திற்கான ஆட்டத்தில் இந்தியா இன்று நியூஸிலாந்தை எதிர்கொள்கிறது.

**>>>>><<<<<**

**Dutch** ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Ayush Shetty** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-14, 17-21, 21-11 என்ற செட்கணக்கில் ஜெர்மனியின் **Matthias Kicklitz** –ஐ வென்றார்.

மற்றொரு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் சங்கர் முத்துசாமி சுப்பிரமணியன் 21-6, 17-21, 21-19 என்ற செட்கணக்கில் அஜர்பைஜானின் **Dicky Dwi Pangestu** -வை வென்று காலிறுதிக்கு தகுதி பெற்றார்.

**>>>>><<<<<**

பிரான்ஸில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மனிக்கா பத்ரா காலிறுதிக்கு முன்னேறி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், ருமேனியாவின் **Bernadette**-யை வென்றார்.

**>>>>><<<<<**

பிரான்ஸில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Akanksha Salunkhe** இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளார்.

**>>>>><<<<<**

இத்தாலியில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Yashaswini Gorpade - Krittwika** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**>>>>><<<<<**